1972 ஆகஸ்ட் 24]

பெருகியிருக்கிறதா? அந்தப் பண்ணையை லாபகரமாக நடத்த முயற்சி செய்வார்களா? அப்படி இல்லையென்றால் மூடிவிடுவதற்காவது அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தண்ணீர் வசதி எந்தப் பகுதியில் இருக்கிறதோ அந்த அளவுக்குள்ள ஏரியாவில் பாசனம் நடைபெறுகிறது, லாபகரமாக நடக்கிறது. ஆடுமாடுகள் வருவது தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, இப்போது ஓரளவு லாபம் வந்து கொண்டிருக்கிறது. மேலும் லாபம் வரக்கூடிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. ஏ. ஆர். சுப்பையா : இவ்வளவு குறைபாடுள்ள பண்ணை எந்தக் காலத்தில் யாரால் ஏற்படுத்தப்பட்டது என்பதைக் கூற முடியுமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அந்த விவரம் இப்போது என்னிடம் இல்லை.

வெங்காயம் ஏற்றுமதி.

*320 வினா.—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலிருந்து விவசாயிகளுக்கு வெங்காயம் வெளிநாடு மார்க்கெட்டுகளுக்கு ஏற்றுமதி இல்லாத காரணத்தால் வெங்காயம் சாகுபடி செய்யும் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் பேரில் அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு மன்னை ப. நாராயணசாமி : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. என். குமாரசாமி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, கோவை மாவட்டத்திலே வெங்காய சாகுபடி ஏராளமான விவசாயிகள் செய்து கொண்டிருந்தார்கள். அதை இலங்கை போன்ற வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்த காரணத்தினால் அவர்களுக்கு நல்ல விலை கிடைத்து வந்தது. ஆனால் அது இன்றைக்கு

மாற்றப்பட்டு, அவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். எனவே, இலங்கை போன்ற நாடுகளிலே வெங்காயத்திற்கு மார்க்கெட்டை தேடித் தர அரசாங்கம் முன் முயற்சி எடுத்து ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல் இப்பொழுது ஒன்றும் விளைவு குறைவாக இல்லை. வெங்காயம் அப்படி ஒன்றும் தேங்கிக் கிடக்க வில்லை. இன்றைக்கும் மலேசியா, சிங்கப்பூர் போன்ற வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி நடந்து கொண்டுதான் இருக்கிறது. இலங்கை ஒன்று மட்டும்தான் அந்த ஏற்றுமதியைத் தடை செய்திருக்கிறது என்றாலும், வெங்காயம் ஏற்றுமதி 1969-70-லே 1 இலட்சத்து 90,000 டன்னும், 1971-72-லே 2 இலட்சத்து 8,000 டன்னும், 1971-72-லே 2 இலட்சத்து 28,000 டன்னும் செய்திருக்கிறோம்.

திரு. நா. வீராசாமி: முன்பெல்லாம் தமிழகத்திலே சொல்லாற்றல் பெற்றவர்களுக்கே வெங்காய பெர்மிட் கொடுத்ததாகவும், இப்பொழுது தமிழ்நாட்டிலே அப்படிப்பட்ட தலைவர்கள் கட்சிமாறிய காரணத்தால் அது எல்லாம் நிறுத்தப் பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறதே அது உண்மையா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: அது பற்றி உறுப்பினருக்கு தெரியும் போல் இருக்கிறது. அதைப் பற்றி என்னிடம் தனிப்பட்ட முறையில் கேட்டால், நான் பின்னால் சொல்லுகிறேன் என்று உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1969-70, 1970-71, 1971-72 ஆகிய மூன்று ஆண்டுகளில் வெங்காயம் எவ்வளவு ஏற்றுமதியானது என்பதைத் தெரிவித்தார்கள். இதில் மலேயாவுக்கும், சிங்கப்பூருக்கும் மாத்திரம் இந்த ஆண்டிற்கும் இதற்கு முந்திய ஆண்டிற்கும் எவ்வளவு ஏற்றுமதி ஆனது என்பதைச் சொல்ல முடியுமா? இலங்கைக்கு ஏற்றுமதியானதை இந்த நாடுகளுக்கு ஈடுகட்ட முடிந்ததா என்பதையும் தெரிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: அதற்குத் தனித் தனியாக விவரம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால், பிறகு நான் பதில் சொல்லுகிறேன்.

1972 ஆகஸ்ட் 24]

திரு. சோ. அழகர்சாமி : அப்படி வெங்காய ஏற்றுமதி மலேசியாவிற்கும் சிங்கப்பூருக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டது தனியார் மூலமாகவா அல்லது அரசாங்கமே இதைச் செய்ததா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தனியார் துறையினாலும், ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷனாலும் ஏற்றுமதி செய்யப்பட்டது.

திரு. சு. துரைசாமி : தற்பொழுது ரெயில்வே வாகன் சரியாகக் கிடைக்காததால் கடந்த ஒரு மாதகாலமாக வெங்காய வியாபாரிகள் கஷ்டப்படுகிறார்கள். இதனால் வெங்காய ஏற்றுமதி தேங்கி விட்டது. இந்தக் குறைபாட்டினை நீக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அதற்கான நடவடிக்கைகளை எடுக்க முயற்சிக்கிறோம்.

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவரவர்களே, வெங்காயம் சாப்பிடுவதால் ரத்தத்திலே இருக்கிற 'கொலாஸ்ட்டல்' என்ற பொருள் குறைந்து 'ஹார்ட் அட்டாக்' போன்ற வியாதிகள் வராமல் இருக்கிறது என்கிறார்கள். இது பலருக்குத் தெரிவதில்லை. எனவே, இதை அரசாங்கம் விளம்பரப் படுத்த பிரச்சாரம் செய்யுமா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தமில்லை.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அந்தப் பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : வெங்காயத்தின் விலை உள்நாட்டிலே அடிக்கடி ஏறுவதும், இறங்குவதுமாக இருக்கிறது. அது சமயத்திலே கிலோ 70 பைசா என்று விற்கிறது; இன்னொரு சமயத்திலே ஒரு ரூபாய் 70 பைசா என்று விற்கிறது. வெங்காயத்தை ஏற்றுமதி செய்வதால் இப்படி உள்நாட்டு விலை பாதிக்கப்படுகிறதா? நம்முடைய தேவைக்கு இல்லாமலேயே வெங்காய ஏற்றுமதிக்கு அரசாங்கம் அனுமதி கொடுத்து விடுகிறதா? இவைகளை எல்லாம்

கவனித்து வெங்காயத்தின் விலை உள்நாட்டிலே ஏறாமல் இருப்பதற்கு அரசாங்கம் கண்காணித்து, தக்க அளவிலே ஏற்றுமதி செய்வதற்கு வழிவகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: நமது நாட்டிலே எல்லாப் பொருள்களின் விலையும் திடீரென்று ஏறுவதெல்லாம் வியாபாரிகளின் தந்திரத்தால்தான் என்பது எல்லோருக்கும் தெரியும். அதிலே குறிப்பாக எந்தப் பொருட்களின் உற்பத்தி குறைகின்றனவோ அந்த நேரத்திலே விலை ஏறும். அந்தப் பொருள் உற்பத்தி அதிகமாக இருக்கிற சீசனிலே விலை குறையும். ஏற்றுமதி காரணமாக மாத்திரம் அந்த விலை ஏற்றம் வருவதில்லை. விலை ஏற்றத்தைத் தடுக்கும் நடவடிக்கைகளை மத்திய அரசாங்கமும் எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதை இங்கே சொல்லிக் கொள்கிறேன்.

சுற்றுலாப் பேருந்துப் பணி

* 321 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழக போக்குவரத்துத் துறை பேருந்துகள் மூலமாக சென்னை நகரிலிருந்து மாநிலத்தின் முக்கியப் பகுதிகளுக்கு சுற்றுலா சென்று வர பயணிகளுக்கு ஏற்பாடு செய்துதர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. இராமச்சந்திரன்: தற்போது இல்லை.

திரு. என். கிட்டப்பா: வாரம் ஒரு முறை மாமல்லபுரத்திற்குச் செல்ல தனிப் பேருந்துகள் விடுவதுபோல், தமிழ்நாட்டிலே இருக்கும் முக்கியப் பகுதிகளுக்கு விடுமுறை நாட்களிலே சென்று வர தனி சுற்றுலாப் பேருந்துகளை விட தமிழக போக்குவரத்துத் துறை பரிசீலித்து ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. சு. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர்களே, இந்த சுற்றுலாவிற்காக பேருந்துகளை விடும் பணியை சுற்றுலா வாரியம் கவனித்து வருகிறது. அவர்களிடத்திலே இரண்டு சிர்வசதி பேருந்துகள் இருக்கின்றன. இந்தப் பணியை அவர்கள் மேற்கொள்வதுதான் சரியே ஒழிய, தமிழக போக்குவரத்துத் துறை மேற்கொள்வது சரியல்ல என்று சொல்லிக் கொள்கிறேன்.